மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : : தலைவர் அவர்களே, உடனடியாக துரிதப்படுத்தப்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் வந்த* என்ற வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள்.

*வினா எண் 496—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள் ஏன் செயலிழந்து உள்ளன ?

(ஆ) அவர்களிடம் உள்ள டிராக்டர்களை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு கொடுக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்களை வாடகை விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் டிராக்டர்களைப் பராமரிக்கும் செலவினங்களை ஈடு செய்யவில்லை. தனியார்களும், கூட்டுறவு நிறுவனங்களும் டிராக்டர் மற்றும் விவசாயக் கருவிகளை வாங்கி வாடகைக்கு விடுவதால் ஊராட்சி ஒன்றியங் களில் உள்ள டிராக்டர்களுக்குத் தேவை குறைவாக உள்ளது. அப்படியிருந்தும் சில ஊராட்சி ஒன்றியங்களில் நல்ல முறையில் டிராக்டர்கள் செயல்படுகின்றன.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான டிராக்டர்கள் குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன. மேலும் குறைந்த வாடகைக்கு விடும் உத்தேசம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் எவ்வளவு டிராக்டர்கள் இருக்கின்றன ? அவைகளில் எத்தனை செயலிழந்து இருக்கின்றன ? அதனால் அரசுக்கு வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களில் 340 டிராக்டர்கள் இருக்கின்றன. அதிலே 155 டிராக்டர்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. 178 டிராக்டர்கள் பழுதடைந்திருக்கின்றன. உபயோகப்படுத்த முடியாத டிராக்டர்கள் 7 இனங்கள் இருக்கின்றன.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற பெற்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே இந்த 178 டிராக்டர்களும் ரிப்பேர் பார்க்கப்படாமல் யூனியன் ஆபீசுக்கு முன்னால் மிகவும் பழுதடைந்து துருப்பிடித்து இருக்கின்றன. ஒன்று அவைகளை விற்று அந்த நிதியை ஊராட்சி ஒன்றியங்களின் நிதியில் சேர்க்க வேண்டும். அல்லது ரிப்பேர் செய்து விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் செய்ய வேண்டும். இதைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற பழுதடைந்த இயந்திரங்களை யார் கவனிக்காமல் அதைப் பழுது பார்க்கும் ஏற்பாட்டைச் செய்து உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, இதைப்பற்றி எல்லாம் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்களில் பெரும்பகுதி பழுதடைந்து இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அப்படித்தான் இருக்கின்றன என்று நானும் அறிகிறேன். அதில் இருந்து வருகின்ற வருமானம் அதைப் பழுது பார்ப்பதற்குக்கூட போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் அங்கே நடக்கும் பலவிதமான ஊழல்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அந்த டிராக்டர்களை சரி செய்து, லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் சிறு உழவர்களுக்கு உபயோகப்படுகிற வகையில் அளிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முன் வருமா? ஒரே மாதிரியான கட்டணம் எல்லா இடங்களிலும் வசூலிக்கப்படுவது இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஒரு இடத்தில் ஏக்கருக்கு இவ்வளவு வாடகை என்றும், மற்றொரு இடத்தில் மணிக்கு இவ்வளவு வாடகை என்றும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, ஒரே மாதிரியான கட்டணம் தமிழகம் முழுவதும் விதிக்கப்படவும், குறைந்த வாடகையில் சிறு விவசாயிகளுக்கு அந்த டிராக்டர்கள் அளிக்க நடவடிக்கை எடுக்கவும், பழுது அடையாமல் ஒழுங்காக அந்த டிராக்டர்கள் செயல்படுவதற்கும் வழிவகை செய்யும் முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாடு அடைய வேண்டும் என்கிற கருத்தின் அடிப்படையில்தான் இது போன்ற டிராக்டர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பணக்காரர்களைப்பற்றி அரசு கவலைப்படவில்லை. அவர்களே டிராக்டர்கள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தனியார்கள் நிறுவனங்களில் இருந்தும் அதிகமான வாடகைக்கு வாங்கிக் கொள்ள அவர்களால் முடிகின்றது. சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் அளிக்க வேண்டும் என்கிற வகையில்தான் இத்தகைய நடவடிக்கைகள்

1981 மார்ச் 26]

எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் பழுதுபட்ட டிராக்டர்களைச் சரிப்படுத்தவும், செம்மைப்படுத்தவும் அரசு ஆவன செய்யும்.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல டிராக்டர்கள் பயனற்று இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு). அப்படி பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கிற 7 டிராக்டர்களுக்குப் பதிலாக புதிய டிராக்டர்களை அந்த ஒன்றியங்களுக்கு வாங்கித் தர அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த எண்ணமும், ஏற்பாடும் அரசிடம் இருக்கின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில் தான் ஒன்றியங்களில் அவைகள் வாங்கி வைக்கப்பட்டன. இப்போது பெரும்பான்மையான இடங்களில் அவைகள் பழுது அடைந்து பயனற்றுப் போய் இருக்கின்ற காரணத்தால், சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் கிடைக்கவில்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் அதிகப்படியான டிராக்டர்கள் வாங்கிக் கொடுக்க அரசு முன் வருமா? நிதி வசதி இல்லை என்றால், ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து அவற்றை வாங்கித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலும், இப்போது இருக்கின்ற சூழ்நிலையின் அடிப்படையிலும் இந்த ஏற்பாட்டை அரசு செய்யும்.

திரு. வெ. அரங்கராசன்: தலைவர் அவர்களே, யூனியன்களில் உள்ள டிராக்டர்களில் இருந்து வருகின்ற வருமானத்தை விட அதிக அளவிற்கு பழுதுபார்க்க ஆகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அதிகமாகச் செலவு செய்வதற்குப் பதிலாக அந்த டிராக்டர்களை ஏலம் போட்டு விட்டு, புதிதாக டிராக்டர்கள் வாங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏலம் எடுப்பவர்கள் புத்திசாலிகள் என்று கருதுகிறேன். நமக்கே பயன்படாது என்றால், அவர்கள் எடுத்துவிட மாட்டார்கள். இருப்பினும் முயற்சிக்கலாம்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் இருக்கும் டிராக்டர்களை 'கண்டம்' செய்து, பல வருஷங்களாக அவைகளை ஏலம் போடாமல் பல

[1981 மார்ச் 26

இடங்களில் வைத்திருப்பதால், அவைகளில் உள்ள பாகங்களைத் திருடிக் கொண்டு போகிற நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக அவைகளைப் பின்னர் விற்க முடியாமலும் போய விடுகின்றன. ஆகவே, அந்த டிராக்டர்களை 'கன்டம்' செய்த உடனேயே அதை ஏலத்தில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கருத்துக்களை மனதில் வைத்துதான் முதலில் பதில் சொன்னேன். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம், அதைப் பற்றியும் சிந்திப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூரில் பேருந்து நிலையம்.

*வினா எண் 497—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி கூடலூரில் பேருந்து நிலையம் கட்ட ஆரம்பித்து 10 ஆண்டுகள் ஆகியும் இதுவரை வேலை முடியவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : கூடலூரில் பேருந்து நிலையம் கட்ட இடம் தேர்ந்தெடுத்து 1972 ஆம் ஆண்டு பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றியது. பேருந்து நிலையம் கட்டுமிடம் பேரூராட்சிக்குச் சொந்தமானபோதிலும், அந்த இடத்திற்குப் பேருந்துகள் செல்லும் வழி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது. இந்த இடம் நன்கொடையாகப் பெறப்பட்டது. இதற்குச் சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியது. இடம் பெறப்பட்ட பின்னர், உணவு விடுதி, பயணிகள் தங்கும் விடுதி, காம்பவுண்டு சுவர், தளம், குடிநீர், கிணறு, மின் இணைப்பு, கழிவறை வசதிகள் முதலியன செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. வாகன போக்குவரத்து துறை தெரிவித்துள்ளபடி மேற்கொண்டு சில வசதிகள் செய்ய வேண்டியதாயிற்று. இவ்வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மேற்சொன்ன வேலைகளனைத்தும் பஞ்சாயத்து நிதியைக் கொண்டே செய்யப்பட்டு வருகின்றன. வருகின்ற சூன் திங்களுக்குள் அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு பேருந்து நிலையம் செயல்பட தயாராகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.